Recd. on 27/2/20

நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், தஞ்சாவூர் மண்டலம்,
தஞ்சாவூர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை:- திரு.சு.சங்கரமூர்த்தி,பி.இ.,

நடவடிக்கை கடிதம் எண்: **742/2016** தம2 நாள்: **18.02.2020**

பொருள்:- மனைப்பிரிவு – நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அலுவலகம், தஞ்சாவூர் மண்டலம் - தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டம் - வல்லம் தேர்வுநிலை பேரூராட்சி - வல்லம் வடக்கு சேத்தி கிராமம் - புல எண்கள்: 136/2B,3,4-ல் 3.20 ஏக்கர் பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் அளித்து – உத்தரவிடப்படுகிறது.

பார்வை:
1. செயல் அலுவலர், வல்லம் தேர்வுநிலை பேரூராட்சி, அவர்களின் கடிதம் ந.க.எண்: 197/2016/அ1 நாள்: 22.06.2016, 08.03.2019 மற்றும் 04.12.19
2. மனுதாரர் திரு.துரைஜெயபால், அவர்களின் விண்ணப்பம் நாள்: 06.10.2016 மற்றும் 05.03.2019
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்: 7879/2012/எல்ஏ2 நாள்: 19.04.2012
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்: 13686/2017/எல்ஏ1 நாள்: 08.09.2017
5. அரசாணை எண்: 79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 04.05.2017
6. அரசாணை எண்: 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 04.02.2019

உத்தரவு:-

பார்வை 1-ல் கண்ட செயல் அலுவலர், வல்லம் தேர்வுநிலை பேரூராட்சி, அவர்களின் கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு உத்தேசம் தொடர்பான இணைப்புகள் பரிசீலிக்கப்பட்டு மனைப்பிரிவு நிபந்தனைகளின் படி இத்துறையின் தொழில்நுட்ப ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது.

தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் இக்குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ./ந.ஊ.து.இ.(த.ம)எண்: 12/2020** என எண்ணிடப்பட்டு மூன்று வரைபட நகல்கள் இத்துடன் உரிய நடவடிக்கைக்காக **செயல் அலுவலர், வல்லம் தேர்வுநிலை பேரூராட்சி** அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

மனைப்பிரிவு நிபந்தனை எண்.19(இ) மற்றும் 19(உ)குறித்து உறுதி செய்துகொண்ட பின்னரே உள்ளாட்சி மன்றத்தின் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

மேலும், பார்வை (5)ல் கண்ட அரசாணை விதி எண்:9-ல் நகர் ஊரமைப்பு இயக்குநரிடமிருந்து செய்யக் கருதியுள்ள மேம்பாடு குறித்து முன் அனுமதி பெறப்பட்டவுடன் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு, நிலப்பயன் மாற்ற கட்டணமாக 1899ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம், (மத்திய சட்டம் 2/1899) உட்கூறு AA பிரிவு 47-ன் கீழ் சந்தை மதிப்பில் 3 விழுக்காடு நிர்ணயம் செய்து அதனை வசூலித்து, அரசு கணக்கு தலைப்பின் கீழ் வரவு வைத்து செய்யக் கருதியுள்ள மேம்பாட்டுப் பணியை மேற்கொள்ள உரிய அனுமதி அளிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டதனை தொடர்ந்து மேற்படி தொகையினை பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

.2..

கணக்குத் தலைப்பு:

0217-Urban Development – 60 Other Urban Development Schemes – 800 Other Reciepts – AS Receipts Under Land use conversion charges – 27 Non Taxation fees – 09 collections.
DPC: 0217 60 800 AS 2790

உள்ளாட்சி மன்ற ஒப்புதலுக்கு பின்னரே மனைப்பிரிவு அமுலுக்கு வரும். எனவே, மனுதாரர் மேற்கொண்டு உத்தரவிற்காக செயல் அலுவலர், வல்லம் தேர்வுநிலை பேரூராட்சி அவர்களை தொடர்பு கொண்டு இறுதி ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குனர்,
தஞ்சாவூர் மண்டலம், தஞ்சாவூர்.

இணைப்பு:-

மூன்று வரைபடங்கள் மற்றும் நிபந்தனைகள்.

பெறுனர்:-

செயல் அலுவலர்,
வல்லம் தேர்வுநிலை பேரூராட்சி,
தஞ்சாவூர் வட்டம்,
தஞ்சாவூர் மாவடடம்.

நகல்:

திரு.துரைஜெயபால் (முகவர்)
தெலுங்கன்குடிக்காடு கிராமம்,
வடக்குதெரு,
ஓரத்தநாடு வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

அலுவலக முகவரி:

நகர் ஊரமைப்பு துணை இயக்குனர்
அலுவலகம், தஞ்சாவூர் மண்டலம்
எண்: A2, அருளானந்தா நகர்,
7-வது தெரு,
தஞ்சாவூர் - 613 007.
மின்அஞ்சல்:-**ddtjrregion@gmail.com**